கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், நீஆது.,
சுற்றுச்சூழல் குழும வட்டம், திருச்சி

முன்னிலை : பொறி. செ.க.லதா, பி.இ.
கண்காணிப்புப் பொறியாளர், நீ.ஆ.து.,

**செயல்முறை எண். நிஉ / 1323 / 2021 / நாள் : 29 .10.2021**

**பொருள்:** பணியமைப்பு – த.நா.அ.ப.தொ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.அ.சபியுல்லா வரைதொழில் அலுவலரின் மகன் திரு.ச.சையது ஷேக் அப்துல்லா, அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டது - இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த 18.03.2020 முப பணியில் சேர்ந்தது – முறையான பணியமர்வு ஆணை வழங்கியதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தது – தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**

1) முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து. மற்றும் தலைமைப் பொறியாளர் பொது, பொ.பது. சென்னை அவர்களின் செயல்முறை எண் எஸ் 3(4)/30357/2019/ நாள் 22.02.2020

2) தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து. திட்ட உருவாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் எஸ் 1(2) / 0483 / 2020 / நாள் 09.03.2020

3) கண்காணிப்புப்பொறியாளர், சுற்றுச்சூழல் குழும வட்டம், நீஆது, திருச்சி – 20 அவர்களின் செயல்முறை ஆணை எண் நிஉ / 369 / 2020 / நாள் 16.03.2020

4) அரசாணை (3ப) எண்.25 பொதுப்பணித் (பி1) துறை / நாள் 08.09.2021

********

முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து. (மற்றும்) தலைமைப்பொறியாளர் (பொது), சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி தலைமைப்பொறியாளர், திட்ட உருவாக்கம், நீஆது அமைப்பின் கீழ் செயல்படும் கண்காணிப்புப்பொறியாளர், திட்ட உருவாக்க வட்டம், திருச்சி அலுவலகத்தில் வரைதொழில் அலுவலராக பணியாற்றி வந்த திரு.அ.சபியுல்லா என்பவர் கடந்த 15.01.2017 அன்று பணியிலிருக்கும்போது காலமானதையடுத்து, அவரது மகன் திரு.ச.சையது ஷேக் அப்துல்லா, என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் நீர்வளத்துறையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு கடந்த 18.03.2020 மு.ப முதல் இவ்வட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

அதனைத்தொடர்ந்து பார்வை 4-ல் காணும் அரசாணையில் திரு.ச.சையது ஷேக் அப்துல்லா அவர்கள் முதன் முதலாக பணியில் சேர்ந்த நாளான 18.03.2020 மு.ப முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு.ச.சையது ஷேக் அப்துல்லா, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியினை 18.03.2020 மு.ப முதல் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதால் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகளுக்கான விதி எண் 23(அ)(i)-ன் படி இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 18.03.2020 மு.ப முதல் தகுதிகாண்பருவம் துவங்கி ஆணை வழங்கப்படுகிறது.

திரு.ச.சையது ஷேக் அப்துல்லா, இளநிலை உதவியாளர் தகுதிகாண் பருவகாலத்தை மூன்றாண்டுகாலம் தொடர்ந்து பணியாற்றுவதற்கு உட்பட்டு இரண்டாண்டுகாலம் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யவேண்டும் என்கிற நிபந்தனையும் விதிக்கப்படுகிறது. மேலும் அன்னார் தகுதிகாண்பருவ காலத்திற்குள் உரிய துறைத்தேர்வில் தேர்ச்சிபெற வேண்டும் மற்றும் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப்பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சியில் தேர்ச்சிபெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த ஆணை வழங்கப்படுகிறது.

29/10/2021

கண்காணிப்புப் பொறியாளர், நீஆ.து,
சுற்றுச்சூழல் குழும வட்டம், திருச்சி-20.

29/10/21

பெறுநர்

திரு.ச.சையது ஷேக் அப்துல்லா,
இளநிலை உதவியாளர்,
சுற்றுச்சூழல் குழும வட்டம், நீஆது,
திருச்சி-20

நகல் : தலைமைப்பொறியாளர், நீஆது, திட்ட உருவாக்கம், சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் : பணிப்பதிவேட்டிற்கு

நகல் : உபரி – 2

நகல் : கோப்பிற்கு